RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# நாலடியாரின் பண்பாட்டுப் பதிவுகளில் பெண் சித்தரிப்பு

**சு. பாத்திமா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு, கேரளா-678104, இந்தியா

# Women's Representation in the Cultural Records of Naladiyar

**S. Fathima** [a, *]

[a] Department of Tamil, Government College Chittur, Chittur, Palakkad-678104, Kerala, India

* Corresponding Author: fathimasuja21@gmail.com

**ABSTRACT**

Naladiyar, one of the foremost ethical works of the post-Sangam period, is a distinguished anthology compiled by Jain ascetics. As reflected in the Tamil proverb, "Ālum Vēlum Pallukku Uruthi; Nālūm Iraṇḍum Sollukku Uruthi" ("The banyan and neem strengthen the teeth; the Naladiyar and the Tirukkural strengthen one's speech"), the work is renowned for its concise yet profound exposition of the impermanence of life and the principles of righteous living. However, when Naladiyar is examined from a feminist perspective, its portrayal of women emerges as complex, multifaceted, and open to critical interpretation. Written within the philosophical framework of Jain ethics, the text generally presents women through two contrasting perspectives. In its discussion of domestic life, it praises the virtues of the ideal wife (manaimatchi), who preserves the dignity, harmony, and stability of the family. Conversely, from the standpoint of asceticism, the text emphasizes the impermanence of worldly existence by portraying feminine beauty and relationships with courtesans as obstacles to spiritual liberation and as temptations to be avoided. These contrasting representations reflect the ethical and religious values of the period in which the work was composed. This article critically examines the concepts of womanhood presented in Naladiyar by situating them within the socio-cultural context of the post-Sangam era and comparing them with contemporary feminist thought. The study seeks to explore how the text's representations of women can be understood in relation to both historical circumstances and modern perspectives on gender and equality.

**Keywords:** Naladiyar, Tirukkural, Feminist Perspective, Cultural Records

## முன்னுரை

சங்கம் மருவிய காலத்து தோன்றிய அறநூல்களில் ஒன்றான நாலடியார், சமண முனிவர்களால் தொகுக்கப்பட்ட பெருமைக்குரியது. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்ற பழமொழிக்கு ஏற்ப, வாழ்க்கையின் நிலையாமை மற்றும் அறநெறிகளைச் சுருக்கமாகவும் ஆழமாகவும் விளக்குவதில் இந்நூல் தனித்துவம் பெற்றது. இருப்பினும், ஒரு பெண்ணிய நோக்கில் நாலடியாரை அணுகும்போது, அதில் பெண்களைப் பற்றிய சித்தரிப்புகள் பன்முகத்தன்மை கொண்டவையாகவும், விவாதத்திற்குரியவையாகவும் அமைகின்றன. சமண அறவியலின் பின்னணியில் எழுதப்பட்ட இந்நூலில், பெண்கள் பெரும்பாலும் இருவேறு துருவங்களாகவே பார்க்கப்படுகின்றனர்: இல்லறத்தின் மாண்பு குறித்து கூறும்போது குடும்ப அமைப்பைப் பேணும் 'மனைமாட்சி' மிக்க பெண்களின் உயர்வு போற்றப்படுகிறது. துறவறப் பார்வையில் அணுகும்போது நிலையாமையை வலியுறுத்தும் நோக்கில் பெண்களின் உடல் அழகும், பரத்தையர் உறவும் பெரும் தடைகளாகவும், தவிர்க்கப்பட வேண்டியவைகளாகவும் எதிர்மறையாகச் சித்தரிக்கப்படுகின்றன.

நாலடியார் குறிப்பிடும் பெண்மை குறித்த கருத்துக்களை அன்றைய காலத்தின் சமூகப் பின்புலத்தோடும், இன்றைய பெண்ணியச் சிந்தனைகளோடும் ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கற்புடை மகளிர்

நாலடியார், வாழ்க்கையின் பல்வேறு நிலைகளை அறக்கண்ணோட்டத்துடன் அணுகுகிறது. 'கற்புடை மகளிர்' என்ற அதிகாரத்தில், ஒரு பெண்ணின் உயர்வு என்பது அவளது குலப்பெருமையிலோ அல்லது பிறர் அவளைப் புகழ்வதிலோ இல்லை; மாறாக, அவள் தன்னைக் காத்துக்கொள்ளும் மன உறுதியிலும், அவளைத் தவறான நோக்கில் அணுகுபவர் எவரும் இல்லாத தூய்மையான சூழலிலுமே உள்ளது என்பதை.

அரும்பெறற் கற்பின் அயிராணி யன்ன

பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும் - விரும்பிப்

பெறுநசையாற் பின்னிற்பா ரின்மையே பேணும்

நறுநுதலாள் நன்மைத் துணை (381)

எனும் பாடல் கற்பு நெறியில் சிறந்தவளாகக் கருதப்படும் இந்திராணியைப் போன்ற சிறந்த புகழுடைய பெண்களாக இருந்தாலும், ஒரு பெண்ணின் உண்மையான பெருமை என்பது - அவளை விரும்பி, அவளை அடையும் ஆசையோடு அவளுக்குப் பின்னால் சுற்றும் ஆண்கள் யாரும் இல்லாதிருப்பதே ஆகும் என்றும் அத்தகைய நற்பண்பு கொண்ட பெண்ணே ஒருவனுக்குச் சிறந்த வாழ்க்கைத் துணையாவாள் என்றும் உணர்த்துகின்றது.

புகழை விடப் புனிதமே ஒரு பெண்ணுக்கு அழகு என்றும் தீய எண்ணம் கொண்டவர்கள் தன் நிழலைக்கூடத் தீண்ட முடியாத அளவிற்குத் தன்னைத் தற்காத்துக் கொள்ளும் பெண்ணே இல்லறத்தின் மேன்மைக்கு அடிப்படையானவள். இதுவே ஒரு பெண்ணின் உண்மையான 'கற்பு' என்றும் இலக்கணம் வகுக்கிறது.

## இல்லறத்தின் மாண்பு

நாலடியாரில் பெண்களைப் பற்றிய பண்பாட்டுப் பதிவுகளை கற்புடை மகளிர் எனும் அதிகாரத்தின் வழியாக பதிவு செய்திருப்பதைக் காணலாகும். ஒரு நல்ல மனைவியின் இலக்கணமாக அன்பு, அடக்கம், மற்றும் கணவனைப் பேணுதல் ஆகியவற்றை முன்வைக்கிறது. குடும்பத்தைப் பேணும் பெண், அந்த வீட்டின் மங்கலமாகக் கருதப்படுகிறாள். கணவனுடைய குறிப்பறிந்து நடக்கும் பெண்ணே சிறந்த இல்லத்தரசியாகப் போற்றப்படுகிறாள். பெண்களின் கற்பு நெறி குறித்து கூறும்போது ஒழுக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளமையைக் காண முடிகின்றது. பெண்கள் தங்கள் கணவரிடம் காட்டும் உறுதிமிக்க அன்பே அவர்களின் உண்மையான அழகு என்று விவரிக்கிறது. "கற்பு" என்பது உடல் சார்ந்த ஒன்றாக மட்டுமன்றி, மன உறுதி சார்ந்த பண்பாகவும் பதிவாகியுள்ளது. நாலடியார் பெண்களைப் பற்றிப் பேசும் போது மூன்று முக்கியக் கோணங்களில் விளக்குவதனை காணலாகும்.

நாலடியார், வாழ்க்கையின் இன்பங்களை மட்டுமல்லாமல், துன்பக் காலங்களில் ஒருவன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் கற்பிக்கிறது. 'கற்புடை மகளிர்' அதிகாரத்தில் ஒரு குடும்பம் வறுமையில் வாடும்போது அந்த வீட்டின் தலைவி எப்படிச் செயல்பட வேண்டும் என்பதற்கான இலக்கணத்தை வகுக்கிறது. செல்வக்காலத்தில் உதவுவதை விட, கஷ்ட காலத்தில் ஒரு பெண் காட்டும் மன உறுதியே 'மனைமாட்சி' எனப் போற்றுகிறது. ஒரு சிறந்த மனைவி என்பவள் எப்படி இருக்க வேண்டும் என்பதை, கணவன் ஈட்டி வரும் பொருள் குறைவானதாக இருந்தாலும், அதற்குள் குடும்பத்தை மிகச்சிறப்பாக நடத்துபவளே சிறந்த பெண் என்றும் விருந்தினர்களை உபசரிப்பதிலும், குடும்பப் பெருமையைக் காப்பதிலும் அவள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்பதை

குடநீரட் டுண்ணும் இடுக்கட் பொழுதுங்

கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினும்

கடனீர்மை கையாறாக் கொள்ளு மடமொழி

மாதர் மனைமாட்சி யாள் (382)

எனும் அடிகள் உணர்த்துகின்றன. விருந்தோம்பல் என்பது தமிழர்களின் அறவாழ்வின் அடிப்படை. "இல்லாரைச் சுட்டி இயைவது உண்பதே" சிறந்த அறம் எனக் கருதப்படுகிறது. தன்னிடம் செல்வம் கொழிக்கும்போது தானம் செய்வதை விட, தான் பசியால் வாடும்போதும் பிறர் பசி போக்க முனையும் பெண்ணின் மனதிடத்தை நாலடியார் உயர்த்திப் பிடிக்கிறது. இதுவே ஒரு குடும்பத்தின் உண்மையான கௌரவம் என்றெல்லாம் கூறி பெண்களின் தலை மீது மிகப்பெரிய சுமையை ஏற்றி வைத்திருப்பதை அறிய முடிகின்றது. பெண்ணின் மீது கருணைக் கொள்ளும்படி செய்துவிட்டு இறுதியில் ஆணாதிக்கத்திற்கு சாதகமான முடிவுகளைச் சொல்லும் தன்மையினை நாலடியார் பாடல்கள் உணர்த்துகின்றன.

## பெண்களது குணமே மேலானது

நாலடியார் அழகில் சிறந்திருந்தும் நற்பண்பு இல்லாத பெண், ஒரு அழகான மண் பொம்மைக்குச் சமம் என்ற கருத்தை முன்வைக்கிறது. அதாவது, ஒரு பெண்ணிற்கு அழகு என்பது அவளுடைய வெளித்தோற்றம் அல்ல; அவளுடைய அன்பு, அடக்கம் மற்றும் நாவடக்கம் ஆகியவையே உண்மையான ஆபரணங்கள் என்கிறது இந்நூல்.

நாலாறும் ஆறாய் நனிசிறிதாய் எப்புறனும்

மேலாறு மேலுறை சோரினும் - மேலாய

வல்லாளாய் வாழும்ஊர் தற்புகழு மாண்கற்பின்

இல்லாள் அமர்ந்ததே இல். (383)

என்ற நாலடியார் பாடல் அடிகள், ஒரு வீட்டின் பெருமை என்பது அந்த வீட்டின் அளவிலோ, அதன் கட்டுமானத்திலோ இல்லை; அங்கு வாழும் பெண்ணின் பண்பிலேயே உள்ளது என்பதை அடித்துச் சொல்கிறது. இந்தப் பாடல், கூரை சிதைந்து, மழையில் நனையும் நிலையிலும் ஒரு பெண் எப்படித் தன் ஆளுமையால் அந்த வீட்டை ஒரு சொர்க்கமாக மாற்றுகிறாள் என்பதை மிக அழகாகச் சித்தரிக்கிறது. மேலும் பெண்கள் மன உறுதியுடன் இருக்க வேண்டியதன் அவசியத்தை நாலடியார் வலியுறுத்துகிறது. துன்ப காலங்களிலும், கணவனுக்கு வறுமை வந்த காலத்திலும் தளராமல் நின்று குடும்பத்தைக் காப்பவள் தெய்வத்திற்கு நிகராகக் கருதப்படுகிறாள். இங்கு பெண்ணை தெய்வப் படிமமாக்கும் தன்மையை காணமுடிகின்றது.

## இளமை நிலையாமை

சமண முனிவர்கள் பாடிய பாடல்கள் எச்சரிக்கையும் செய்வதுண்டு. இளமை மற்றும் அழகு என்பது இன்று இருக்கும் நாளை மறையும் (நிலையாமை). எனவே, அந்த அழகைக் கண்டு பெறுமை கொள்ளாமல் அழியாத பண்புகளை, அறத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. நாலடியார் 'கற்புடை மகளிர்' அதிகாரத்தில், ஒரு பெண்ணின் உயர்வு என்பது அவளது வெறும் புற அழகில் மட்டும் இல்லை; மாறாக, அவளது ஆளுமை, சமூகப் பொறுப்பு மற்றும் கணவனுடனான நுட்பமான உறவுமுறை ஆகியவற்றிலேயே உள்ளது என்பதை

கட்கினியாள், காதலன் காதல் வகைபுனைவாள்,

உட்குடையாள், ஊர்நாண் இயல்பினாள்; - உட்கி

இடனறிந் தூடி இனிதின் உணரும்

மடமொழி மாதராள் பெண்.(384)

எனும் பாடல் அடிகள் உணர்த்துகின்றன. ஒரு குணவதியான பெண்ணிற்குரிய நான்கு பண்புகளை கூறும்போது அவள் கண்பார்வைக்கு இனியவளாகவும், கணவன் விரும்பும் வண்ணம் தன்னை அழகுபடுத்திக் கொள்பவளாகவும், கணவனிடம் மதிப்பும் அச்சமும் (மரியாதை) கொண்டவளாகவும், ஊரார் பழிப்பிற்கு நாணுகின்ற இயல்புடையவளாகவும் இருப்பவளே சிறந்த பெண் என்று வரிசைப்படுத்தி, கணவனிடம் பிணக்கு (ஊடல்) கொள்ளும்போதும் இடம் அறிந்து செயல்பட்டு, பின் இனிமையாகக் கூடுபவளே பெண்ணாவாள் என்று போற்றுவதிலிருந்து வாழைப் பழத்தில் ஊசியேற்றுவது போன்று பெண்ணாக்கல் எனும் பணி செவ்வன நிறைவேற்றப்பட்டிருப்பதனை காண முடிகின்றது. மேலும் ஒரு பெண்ணின் அக்காலத்துச் சமூகப் பண்பையும் தனிப்பட்ட உறவுமுறைப் பண்பையும் இணைத்துப் பேசுகிறது.

நாலடியார் காட்டும் பெண்ணிய இலக்கணம் என்பது அழகு, அன்பு, அச்சம், அறிவு ஆகிய நான்கின் கலவையாகும். கணவனுக்கு இனியவளாகவும், ஊருக்கு நல்லவளாகவும், தன் உணர்ச்சிகளைக் கையாளத் தெரிந்தவளாகவும் இருக்கும் பெண்ணே ஒரு இல்லறத்தின் உண்மையான விளக்கு என்பதையும் இப்பாடல் அழகாக விளக்கியுள்ளது.

நாலடியார் 'கற்புடை மகளிர்' அதிகாரத்தில் வரும் மற்றொரு பாடல் ஒரு பெண்ணின் அக உணர்வை மிக நுட்பமாகப் பேசுகிறது. தன் கணவனிடம் அவள் கொண்டிருக்கும் மாறாத அன்பையும், அதே வேளையில் பொருள் தேடுவதற்காகப் பலரை நாடும் பெண்களின் செயலைக் கண்டு அவள் கொள்ளும் வியப்பையும் ஒப்பிட்டுக் காட்டுகிறது. இது தூய காதலுக்கும், வணிக ரீதியான போலி அன்புக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்கும் பாடலாகும்.

எஞ்ஞான்றும் எங்கணவர் எந்தோள்மேற் சேர்ந்தெழினும்

அஞ்ஞான்று கண்டேம்போல் நாணுதுமால்; - எஞ்ஞான்றும்

என்னை கெழீஇயினர் கொல்லோ பொருள்நசையாற்

பன்மார்பு சேர்ந்தொழுகு வார்.(385)

எனும் பாடல் அடிகள் தன் கணவனைத் தினமும் கண்டாலும், ஒவ்வொரு முறையும் புது நாணம் கொள்ளும் பெண்ணின் கூற்றாகும், இது அவளது காதலின் உன்னதத்தைப் பறைசாற்றுகிறது. அதே நேரத்தில், வஞ்சகமான உறவுகளில் ஈடுபடுபவர்களின் மனச்சோர்வற்ற அதாவது வெட்கமற்ற போக்கைச் சாடுவதன் மூலம், ஒழுக்கமே வாழ்வின் அடிப்படை என்பதை நாலடியார் மீண்டும் உறுதிப்படுத்துவதனை அறிய முடிகிறது.

## பண்புடை மகளிர்

நாலடியார் அறக்கருத்துக்களைக் கூறும்போது, ஒரு பொருள் யாரிடம் இருக்கிறது என்பதைப் பொறுத்தே அதன் மதிப்பு தீர்மானிக்கப்படுகிறது என்பதை வலியுறுத்துகிறது. ஒரு பெண்ணின் அழகு மற்றும் பண்பு ஒரு நாணமுடைய பெண்ணிடம் இருக்கும்போது அது எத்தகைய வலிமையையும் சிறப்பையும் பெறுகிறது என்பதை மூன்று வலிமையான உவமைகள் மூலம் விளக்குகிறது.

உள்ளத் துணர்வுடையான் ஓதிய நூலற்றால்

வள்ளன்மை பூண்டான்கண் ஒண்பொருள்; - தெள்ளிய

ஆண்மகன் கையில் அயில்வாள் அனைத்தரோ

நாணுடையாள் பெற்ற நலம்.(386)

இதில் ஒரு பெண்ணின் அழகு என்பது வெறும் சதைப்பற்று அல்ல; அது 'நாணம்' எனும் உணர்வுடையவளிடம் இருக்கும்போதுதான் அந்த அழகிற்கு ஒரு புனிதமும் மரியாதையும் கிடைக்கிறது என்றும். ஈகைக் குணம் கொண்ட வள்ளலிடம் இருக்கும் பொருள் பலருக்கு வாழ்வளிக்கும். அவ்வாறே, ஒழுக்கமான பெண்ணிடம் இருக்கும் நற்பண்புகள் அவளது குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் நன்மையை பயக்கும் என்றும் தெளிந்த அறிவுடைய வீரன் கையில் உள்ள கூர்மையான வாளைப் போன்றது நாணமுடைய ஒரு பெண் பெற்றிருக்கின்ற அழகும் நற்பண்பும் என்றெல்லாம் போற்றுவதும் பெண்ணாக்கல் ஆகும்.

பெண்ணாக்கலின் இன்றியமையாத அம்சம் பெண்ணுக்கு இருக்கவேண்டிய பண்புகள் இருக்கக் கூடாதப் பண்புகள் பற்றிக் கூறுவதாகும். நாலடியாரில் பெண்ணிற்கு நாணம் ஒழுக்கம், கற்புநெறி, நற்பண்பு, விருந்தோம்பல், சகிப்புத்தன்மை போன்ற பண்புகளை உடையவளாகக் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துவது பெண்ணாக்கலேயாகும்.

## பொதுமகளிர் பண்பாடு

நாலடியாரில் பெண்களைப் பற்றிய பதிவுகளில் பெரும் பகுதி பொதுமகளிர் அல்லது விலைமகளிர் குறித்த எச்சரிக்கையாக உள்ளது. பொதுமகளிர் அன்பிற்காக அன்றி, பொருளுக்காகவே ஒருவரை அணுகுவர் என்பதைப் பல பாடல்கள் சாடுகின்றன. ஆடவருக்கான அறிவுரையும் எச்சரிக்கையும் பல பாடல்களின் வழி உரைப்பதனைக் காணலாகும். செல்வம் உள்ளவரை மட்டுமே அவர்கள் இன்சொல் பேசுவர் என்றும், செல்வம் தீர்ந்ததும் விலகிவிடுவர் என்றும் கூறி, ஆடவர்கள் அவர்களிடம் மயங்கக் கூடாது என எச்சரிக்கிறது. இது அக்கால சமூகத்தில் நிலவிய ஒரு எதார்த்தமான பண்பாட்டை வெளிப்படுத்துகிறது. நாலடியார் துறவறத்தைப் போற்றும் நூல் என்பதால், சில இடங்களில் பெண்களை "மாயை" அல்லது "சிற்றின்பத்தின் வாயில்" என்ற கோணத்திலும் சித்தரிக்கிறது. இது பெண்களைத் தாழ்வுபடுத்துவதற்காக அல்லாமல், துறவறம் மேற்கொள்பவர்கள் சிற்றின்பத்தில் சிக்காமல் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் எழுதப்பட்டவை என்றும் கருதுதற்கிடமுண்டு.

நாலடியார் பாடல்கள் காமத்தையும் அதன் பொருட்டு ஏற்படும் போலியான அன்பையும் எச்சரிக்கிறது. அக்காலச் சூழலில் பொதுமகளிர் செல்வம் உள்ளவரை ஒருவிதமாகவும், செல்வம் தீர்ந்தபின் வேறு விதமாகவும் நடந்து கொள்வதை விலாங்கு மீனின் செயல்பாட்டோடு ஒப்பிடுகிறது. இது தனிமனித ஒழுக்கத்தையும், நட்பில் அல்லது உறவில் இருக்க வேண்டிய நேர்மையையும் வலியுறுத்துகிறது.

பாம்பிற் கொருதலை காட்டி ஒருதலை

தேம்படு தெண்கயத்து மீன்காட்டும் - ஆங்கு

மலங்கன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்

விலங்கன்ன வெள்ளறிவி னார்.(375)

எனும் பாடல் சேற்றில் வாழும் விலாங்கு மீன், பாம்பைக் கண்டால் தானும் ஒரு பாம்பைப் போலத் தலையைக் காட்டும்; மீன்களைக் கண்டால் தானும் ஒரு மீனைப் போலத் தன் உடலைக் காட்டும். இத்தகைய இருவேடம் போடும் விலாங்கு மீனைப் போன்ற குணம் கொண்டவர்களின் உறவை நாடுபவர்கள், விலங்கைப் போன்ற பகுத்தறிவற்ற அறிவிலிகள் என்று சாடுவதனைக் காணமுடிகின்றது. போலித்தனமான மனிதர்களை எப்படிக் கண்டறிய வேண்டும் என்பதையும், அத்தகைய உறவுகளில் சிக்கிக்கொள்பவர்களின் மதியீனத்தையும் மிகக் கடுமையாகச் சாடும் நாலடியார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஒரு மீனின் உடலியல் தன்மையை வைத்துக் கொண்டு இத்தகைய ஆழமான உளவியல் கருத்தைக் கூறியிருப்பது தமிழர்களின் நுண்மான் நுழைபுலத்திற்குச் சான்றாகக் கூறலாம்.

## வாக்குறுதி மீறும் மகளிர்

வாழ்வின் நிலையாமையையும் அறத்தின் தேவையையும் உரக்கச் சொல்லும் நாலடியார் ஒரு காலத்தில் பிரியாமல் வாழ்வோம் என்று உறுதி அளித்தவள் பின்னாளில் அடியோடு மாறிப்போனதையும் ஒரு தலைவனின் ஆற்றாமையையும் சித்தரிக்கிறது. மனித உறவுகளில் ஏற்படும் மாற்றத்தையும், அதனால் ஏற்படும் மனப்போராட்டத்தையும்.

பொத்தநூற் கல்லும் புணர்பிரியா அன்றிலும்போல்

நித்தலும் நம்மைப் பிரியலம் என்றுரைத்த

பொற்றொடியும் போர்த்தகர்க்கோ டாயினாள் நன்னெஞ்சே

நிற்றியோ போதியோ நீ (376)

எனும் பாடல் அடிகள் நுட்பமாக உணர்த்துகின்றது. "கோக்கப்பட்ட நூலில் இருக்கும் மணியைப் போலவும், இணையை விட்டுப் பிரியாத அன்றில் பறவையைப் போலவும் நாம் நாள்தோறும் பிரியாமல் இருப்போம்" என்று வாக்குறுதி அளித்த தலைவி செல்வம் இல்லை என்றறிந்ததும் சண்டையிடும் ஆட்டுக்கடாவின் கொம்பைப் போல வளைந்து தன் சொல்லில் மாறுபட்டு நிற்கிறாள் என்று பொதுமகளிரது பண்பை வெளிப்படுத்துகிறது. உறவுகளின் நிலையாமையை உணர்த்தி, அறிவோடு செயல்பட வேண்டியதன் அவசியத்தை நாலடியார் வலியுறுத்துகிறது.

நாலடியார் எனும் அறநூல், வாழ்க்கையின் யதார்த்தங்களை ஒளிவுமறைவின்றிப் பேசும் ஒரு கண்ணாடி. மனித உறவுகளில் சுயநலம் கலக்கும்போது, அது எவ்வளவு கொடியதாக மாறுகிறது என்பதைச் சமண முனிவர்கள் மிகக் கடுமையான உவமைகளால் விளக்கியுள்ளனர். குறிப்பாக, இந்தப் பாடல், பொருளை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டவர்களின் போலி அன்பையும், அதை நம்பி ஏமாறுபவர்கள் அடையும் இழிவையும் படம்பிடித்துக் காட்டுகிறது.:

ஆமாபோல் நக்கி அவர்கைப் பொருள்கொண்டு

சேமாபோல் குப்புறூஉஞ் சில்லைக்கண் அன்பினை

ஏமாந் தெமதென் றிருந்தார் பெறுபவே

தாமாம் பலரான் நகை. (377)

எனும் பாடல் பொது மகளிர் காட்டுப்பசு தன் குட்டியை நக்கி அன்பு பாராட்டுவது போலப் பாசாங்கு செய்து, ஒருவனிடம் உள்ள பொருளைப் பறித்துக் கொள்வர். பொருள் தீர்ந்தவுடன், அந்த இடத்தை விட்டு ஒரு காட்டு மான் போன்று துள்ளி ஓடிவிடுவர். இத்தகைய அற்பமானவர்களின் அன்பைப் பொய் என்று உணராமல் நம்பி ஏமாறும் ஆடவர்கள் பலராலும் இகழ்ச்சி அடையும் நிலையை அடைவர் என்பதை உணர்த்துகின்றது.

இப்பாடல் பொதுமகளிர் பற்றியது மட்டுமல்ல; பயன் கருதிப் பழகும் சமூகத்தின் அனைத்துப் போலி உறவுகளுக்கும் பொருந்துவதைக் காணலாகும். ஒருவரது கையில் செல்வம் இருக்கும்போது 'ஆமா' போல நக்குபவர்கள், செல்வம் மறைந்ததும் 'சேமா' போல ஓடிவிடுவார்கள் என்ற எச்சரிக்கை, காலத்தைக் கடந்த வாழ்வியல் பாடமாகும். பகுத்தறிவைப் பயன்படுத்தாதவன் இறுதியில் கேலிக்குள்ளாவான் என்பதே இப்பாடல் உணர்த்தும் உண்மையாகும்.

## பொதுமகளிர் வஞ்சக இயல்புடையவர்

நாலடியார் காட்டும் அறக்கருத்துக்கள் பல நேரங்களில் கசப்பான உண்மைகளை உரைப்பவையாகும். குறிப்பாக, "பெண்மையின் இயல்பு" அல்லது "பொதுமகளிர்" குறித்த அதிகாரங்களில் வரும் பாடல்கள், புற அழகையும் போலிப் புகழ்ச்சியையும் கண்டு ஏமாறும் மனிதர்களை எச்சரிப்பதுடன். ஒருவரது வஞ்சகமான எண்ணங்களைத் தெளிவாகத் தெரிந்திருந்தும், அதிலிருந்து மீள முடியாமல் தவிக்கும் மனிதர்களின் பலவீனத்தையும் படம்பிடித்துக் காட்டுகிறது.

உள்ளம் ஒருவன் உழையதா ஒண்ணுதலார்

கள்ளத்தாற் செய்யுங் கருத்தெல்லாந் - தெள்ளி

அறிந்த விடத்தும் அறியாராம் பாவம்

செறிந்த உடம்பி னவர். (380)

எனும் பாடல், பொருள் கருதிப் பழகும் போலி அன்புடைய மகளிர் தன் முன்னே இருக்கும் ஒருவனிடம் அன்பு பாராட்டுவது போல நடித்தாலும், அவர்களது மனம் வேறொருவனிடம் தான் இருக்கும். அவர்கள் வஞ்சகமாகச் செய்யும் இந்தக் கள்ளத்தனமான எண்ணங்களை மிகத் தெளிவாக உணர்ந்த பிறகும் ஆடவர்கள் அதை அறியாதவர்களைப் போலவே மீண்டும் அவர்களிடம் மயங்கிக் கிடப்பார்கள் என்று கூறுவதிலிருந்து அன்றைய சமூகத்தின் ஆடவர்களது பண்பினை அறிந்து கொள்ளமுடிகிறது.

நாலடியாரின் இப்பாடல் எக்காலத்திற்கும் பொருந்தும் ஒரு உளவியல் உண்மையைப் பேசுகிறது. பல நேரங்களில் மனிதர்கள் ஒரு உறவோ அல்லது ஒரு பழக்கமோ தமக்குத் தீங்கானது என்று தெரிந்தே அதில் ஈடுபடுகிறார்கள். அந்தத் தீய பழக்கம் அவர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது. இதைத்தான் நாலடியார் சிற்றின்பத்தில் ஈடுபடும் ஆடவர்களை "பாவம் செறிந்த உடம்பினர்" என்று குறிப்பிடுகிறது எனினும் மகளிரை வஞ்சக குணமுடையவர்களாக பொருளாசை மட்டுமே கொண்டவர்களாகச் சித்தரிப்பதனை உணரமுடிகின்றது.

## பெண்ணியக் கருத்துகள்

நாலடியார் அறக்கருத்துக்களைப் பேசுவதோடு மட்டுமல்லாமல், அக்காலச் சமூகத்தில் நிலவிய இல்லறச் சிக்கல்களையும் நுட்பமாகப் பதிவு செய்துள்ளது. இப்பாடல், பரத்தையிடம் சென்றுவிட்டுத் திரும்பும் தலைவனை, அவனது மனைவி எப்படிக் கேலி செய்கிறாள் என்பதையும், ஒழுக்கக் கேட்டை அவள் ஒப்பிட்டுப் பார்க்கும் தன்மையை

கருங்கொள்ளுஞ் செங்கொள்ளுந் தூணிப் பதக்கென்று

ஒருங்கொப்பக் கொண்டானாம் ஊரன்; - ஒருங்கொவ்வா

நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்பன் நீராடாது

என்னையுந் தோய வரும். (387)

எனும் பாடலில் காணலாகும். இந்த ஊரின் தலைவன், கருப்பு நிறக் கொள்ளையும் சிவப்பு நிறக் கொள்ளையும் தரத்தில் வெவ்வேறாக இருந்தாலும் ஒரே அளவில் ஒன்றாகக் கலந்து மதிப்பிடும் அறிவற்றவனைப் போன்றவன். ஏனெனில், என்னோடு ஒப்பிடும்போது எவ்வகையிலும் ஈடாகாத பொதுமகளிரைத் தழுவிவிட்டு, அந்த அழுக்குப் போக நீராடக் கூடச் செய்யாமல், கற்புடைய என்னையும் தீண்ட வருகிறான் என்று தலைவி ஊடலுடன் கூறும் துணிபு இருந்தமையை உணர்த்துகின்றது. இது ஒரு பெண்ணின் தன்மானத்தையும், கணவனின் ஒழுக்கக் கேட்டால் அவள் அடையும் அருவருப்பையும் வெளிப்படுத்துகிறது. உண்மையான அன்பிற்கும், பொருள் கொடுத்து கிடைக்கும் இன்பத்திற்கும் இடையிலான வேறுபாட்டை அறியாத தலைவனை "விலை மதிப்பறியாத வணிகன்" என்று எள்ளி நகையாடுவதன் மூலம் அடங்கிப்போகும் பெண்கள் மட்டுமல்லாமல் துணிந்து தவறைச் சுட்டிக்காட்டும் பண்பையும் நாலடியார் உணர்த்துகிறது.

சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்கள் பெரும்பாலும் பெண்களைக் கட்டுப்படுத்துபவையாகவே பார்க்கப்படுகின்றன. இருப்பினும், நாலடியாரின் பாடல்கள். ஒரு பெண்ணின் தன்மானம் அவளது தனித்துவ அடையாளம் மற்றும் கணவனின் பிழையைச் சுட்டிக்காட்டும் துணிச்சல் ஆகியவற்றையும் வெளிப்படுத்துகிறது. ஒரு ஆண் மையச் சமூகத்தில், தன் கணவனின் ஒழுக்கக் கேட்டினைப் பகடி செய்யும் ஒரு பெண்ணின் குரலாக இப்பாடலை அமைந்திருப்பது சிறப்பாகும்.

நாலடியார் 'கற்புடை மகளிர்' அதிகாரத்தில் வரும் மற்றொரு பாடல் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையிலான ஊடலைத் தாண்டி, ஒரு பெண்ணின் தற்காப்பு மற்றும் சமூக நிலைப்பாட்டை குறித்தும் மிக நுட்பமாகப் பேசுகிறது. தலைவனின் தூதுவனாக வரும் பாணனிடம் தலைவி பேசும் வார்த்தைகள், ஒரு ஆண் மையச் சமூகத்தில் பெண் தன்னை எப்படி அடையாளப்படுத்திக் கொள்கிறாள் என்பதை விளக்குகின்றன.

கொடியவை கூறாதி பாண! நீகூறின்

அடிபைய இட்டொதுங்கிச் சென்று - துடியின்

இடக்கண் அனையம்யாம் ஊரற் கதனால்

வலக்கண் அனையார்க் குரை. (388)

எனும் பாடலில் "பாணனே! என்னிடம் வந்து பொய்களைக் கூறாதே. நீ மீண்டும் பேசினால் நான் இங்கிருந்து மெல்ல ஒதுங்கிப் போய்விடுவேன். இந்த என் கணவனுக்கு நான் 'துடி' எனும் வாத்தியத்தின் இடப்பக்கத்தைப் போன்றவள். ஆனால் அவரோ வலப்பக்கத்தையே விரும்புபவர். எனவே, அவருக்கு வலப்பக்கம் போன்றிருக்கும் அந்தப் பொதுமகளிரிடமே உனது செய்தியைச் சென்று கூறு." என்று துணிச்சலுடன் கூறும் பண்பினைக் காணமுடிகின்றது.

## முடிவுரை

நாலடியார் கற்புடை மகளிர் மற்றும் பொதுமகளிர் எனும் அதிகாரத்தின் வழியாக பெண்களுக்கு இருக்க வேண்டிய நற்பண்புகளையும் ஒழுக்கத்தையும் அவளது அகமனப் போராட்டத்தையும், ஆணாதிக்கச் சமூகத்தில் ஒரு பெண்ணின் உடல் மற்றும் உணர்வுகள் எவ்விதம் கையாளப்படுகின்றன என்பதையும் அறிய முடிகின்றது. மேலும் கணவனின் துரோகத்தைத் தலைவி எதிர்கொள்ளும் விதம், இங்குப் 'பரிதாபத்திற்குரியவள்' என்ற நிலையிலிருந்து 'கேள்வி கேட்பவள்' என்ற நிலைக்கு அவளை உயர்த்துகிறது என்பதனையும் உணர்த்துகின்றது.

## References


Ramasubramaniam, V.T. (2000) Naladiyar Moolamum Uraiyum, Thirumagal Nilayam, Chennai, India.

Sidhamparanaar, S. (2006) Naladiyar Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License